# කාර්ය සාධන වාර්තාව

## நிருவாக அறிக்கை

## Performance Report

## 2014


**ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුව**

**குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்**

**Department of Immigration & Emigration**

**ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුව, අංක 41, ආනන්ද රාජකරුණා මාවත, කොළඹ 10.**

குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் இல 41,ஆனந்த ராஜகருணா மாவத்தை,கொழும்பு-10.

Department of Immigration & Emigration, N0 41, Ananda Rajakaruna Mawatha, Colombo 10.

දුරකථන අංකය/தொலைபேசி இல/Telephone No- +94 11 5329400

www.immigration.gov.lk

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 01. அறிமுகம் | 1 |
| ❖ நோக்கு | 1 |
| ❖ புணி | 1 |
| ❖ விடயப்பொறுப்பு | 1 |
| 02. பணியாட்தொகுதி விபரம் | 2 |
| ❖ குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு | 3 |
| ❖ பயிற்சி, அபிவிருத்திப் பிரிவு | 4-6 |
| 03. வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களின் விநியோகம் மற்றும் திருத்தம் | 7 |
| ❖ தலைமைக் காரியாலயம் | 7 |
| ❖ பிரதேச காரியாலயம் | 8 |
| ❖ வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களின் விநியோகம் மற்றும் திருத்தம் | 9 |
| ❖ வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கான கடவுச் சீட்டுக்களை விநியோகித்தல் | 10 |
| 04. வீசா, எல்லைக் கட்டுப்பாட்டு அலுவல்கள் | 11 |
| ❖ வீசா அனுமதிப்பத்திரங்களின் விநியோகம், நீடிப்பு | 11-15 |
| ❖ துறைமுகம், விசாரணைப் பிரிவு | 15-22 |
| ❖ விசாரணைப் பிரிவு | 23-26 |
| 05. தகவல், தொழிநுட்ப நடவடிக்கைகள் | 27-28 |
| 06. பிரஜைகள் பிரிவு | 29 |
| 07. இந்து-இலங்கை பிரஜைகள் பிரிவு | 30 |
| 08. அபிவிருத்தி, கொள்கைகள் மற்றும் சட்டப் பிரிவு | 31-32 |
| 09. நிதி முகாமைத்துவம் | 33-35 |
| 10. வழங்கல் பிரிவு | 36 |
| 11. நலனோம்புகை நடவடிக்கைகள் | 37-39 |

# குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

# செயலாற்றுதிறன் அறிக்கை

# 2014ஆம் ஆண்டு

## 01. அறிமுகம்

1948ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைப் பிரஜைகளுக்கு வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களை விநியோகித்தல், இலங்கைப் பிரஜைகளல்லாத ஏனைய பிரஜைகளும் ஆட்களும் இலங்கைக்குள் வருகை தருவதையும், இலங்கையிலிருந்து வெளியேறுவதையும் நெறிப்படுத்துதல் மற்றும் இலங்கைக்குள் வருவதைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் விதிகளை மீறும் இலங்கைப் பிரஜைகளல்லாத வெளிநாட்டவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதிகாரம் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு காணப்படுகின்றது. மேலும், 1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க பிரஜைகள் சட்டத்தின் ஏற்பாடுக்களுக்கமைய வெளிநாடுகளில் பிறந்த இலங்கைப் பிரஜைகளின் பிள்ளைகளுக்கு இந்நாட்டு பிரஜாவுரிமையை வழங்குதலும் இலங்கைப் பிரஜாவுரிமையைக் கோருகின்ற இலங்கைப் பிரஜைகளல்லாத ஆட்களுக்கு இந்நாட்டு பிரஜாவுரிமையை வழங்குவதும் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## நோக்கு

- பிராந்தியத்தில் குடிவரவு குடியகல்வு சேவைகளை வழங்குவதில் முன்னணி வகித்தல்

## பணி

- தேசிய பாதுகாப்பு, சமூக விழுமியங்களைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுடன், நாட்டிலிருந்து வெளியில் செல்பவர்கள் மற்றும் நாட்டுக்குள் வருபவர்களை ஒழுங்கமைத்தலும் பிரஜைகளுக்கான சேவைகளை வழங்குதலும்.

## விடயப்பொறுப்பு

- கடவுச் சீட்டுக்களை விநியோகித்தல் மற்றும் இதற்கு இடைநேர் விளைவான கருமங்கள், வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் இதற்கு இடைநேர் விளைவான கருமங்கள், சட்டரீதியற்ற விதத்தில் வருகை தரும் வெளிநாட்டவர்களை அகற்றுதல், எல்லைக் கட்டுப்பாடு, வெளிநாடுகளில் பிறந்த இலங்கையர்களின் பிள்ளைகளை பதிவு செய்தல், இரட்டைக் குடியுரிமை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் இந்திய வம்சாவளியினரை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியன குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான பணிகளாகும்.


# 02. பணியாட்தொகுதி விபரம்

திணைக்களத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பிரதம பொறுப்புக்கூறும் உத்தியோகத்தர் என்ற ரீதியில் முக்கிய பொறுப்புக்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு பொறுப்பளிக்கப்படுவதுடன், அவரது வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகம், ஐந்து கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் பிரதம கணக்காளரிடத்தில் அந்தந்த பிரிவுகளின் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. திணைக்கள பெயர்ப்பட்டியல் 02வது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கமைப்பு குறிப்பில் காட்டப்பட்டுள்ளதுடன், 2014ஆம் ஆண்டின் மொத்த பணியாட் தொகுதியினர் பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பதவி | ஊழியர் வகை | அங்கிகரிக்கப்பட்ட எண்ணிக்கை | மெய் எண்ணிக்கை | வெற்றிடம் / மிகை |
|---|---|---|---|---|
| கட்டுப்பாட்டாளர் நாயகம் | இ.பொ.நி.சே.(விசேட) | 01 | 01 | - |
| மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகம் | இ.பொ.நி.சே. .(விசேட) | 01 | | 01 |
| கட்டுப்பாட்டாளர் | இ.பொ.நி.சே. 1 | 05 | 05 | - |
| பிரதம கணக்காளர் | இ.பொ.நி.சே. 1 | 01 | 01 | - |
| பிரதி/உதவி கட்டுப்பாட்டாளர் | இ.பொ.நி.சே. 11 /111 | 39 | 37 | 02 |
| பிரதி கட்டுப்பாட்டாளர் | திணைக்களம் சார்ந்த | 02 | 01 | 01 |
| உதவி கட்டுப்பாட்டாளர் | திணைக்களம் சார்ந்த | 08 | 03 | 05 |
| கணக்காளர் | இ.பொ.நி.சே. 11 | 02 | 02 | - |
| உள்ளகக் கணக்காளர் | இ.பொ.நி.சே. 1 | 01 | 01 | - |
| நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ. சிறப்புத்தரம் | 02 | 02 | - |
| சிரேஸ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | திணைக்களம் சார்ந்த | 36 | 21 | 15 |
| முறைமை பகுப்பாய்வாளர் | இ.த.தொ.சே. | 01 | - | 01 |
| அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | திணைக்களம் சார்ந்த | 358 | 352 | 06 |
| வரவு-செலவு உதவியாளர் | இணைய சேவைகள் | 01 | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | 02 | - | 02 |
| பயிற்சி முகாமையாளர் | இணை சேவை | 01 | 01 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | இணை சேவை | 20 | 20 | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே. | 368 | 305 | 63 |
| தரவு பதியுனர் | திணைக்களம் சார்ந்த | 35 | 31 | 04 |
| வரவேற்பு உத்தியோகத்தர் | திணைக்களம் சார்ந்த | 01 | 01 | - |
| சாரதி | சாரதிகள் சேவை | 29 | 24 | 05 |
| அலுவலக சிற்றூழியர்கள் | அ.ஊ.சே. | 104 | 101 | 03 |
| காவளாளர் | திணைக்களம் சார்ந்த | 03 | 03 | - |
| **மொத்தம்** | | **1021** | **913** | **108** |

**குடிவரவு, குடியகல்வுத்**

**திணைக்களத்தின் கட்டமைப்பு தோற்றப்பாடு**



**பணியாட்தொகுதி விபரம் (2014)**

(i) **ஆட்சேர்ப்புக்கள்**

**அ. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்புக்கள் / பதவியுயர்வுகள்**

2014ஆம் ஆண்டில் புதிய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறவில்லை. சிரேஸ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கிகரிப்படும் வரையில் கடமைகளை ஆற்றுவதற்காக பதில் கடமையாற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**ஆ. 010101கடவுச் சீட்டு உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு**

2014ஆம் ஆண்டில் புதிய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறவில்லை. 2013.05.02 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கடவுச் சீட்டு உதவி பதவியில் உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான சம்பள பரிவர்த்தனையினை වැටුප් පරිවර්තන தயாரிப்பதற்கும் நிலுவைச் சம்பளங்கள் இருப்பின் வழங்குவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ii) **வினைத்திறன் தடை காண் பரீட்சை**

அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் 2014ஆம் ஆண்டுக்கான வினைத் திறன் தடை காண் பரீட்சையானது 2014.03.05 மற்றும் 2014.03.12 ஆகிய தினங்களில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான சேவைகள் கம்பனிக்குச் சொந்தமான கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. வினைத்திறன் தடை காண் பரீட்சையின் பெறுபேறுகள் 2014.06.02ஆம் திகதி வெளியிடப்பட்டன.

**(iii) இடமாற்றல்கள் மற்றும் ஓய்வுபெறுதல் (2014ஆம் ஆண்டு)**

| **சேவை** | **திணைக்களத்துக்கு வந்தவர்களின் எண்ணிக்கை** | **வெளியே இடமாற்றல் பெற்றுச் சென்றவர்கள்** | **ஓய்வுபெற்றவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| இலங்கை நிருவாக சேவை | 12 | 06 | - |
| உதவி கட்டுப்பாட்டாளர்( திணைக்களம் சார்ந்த) | - | - | 01 |
| அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | - | - | 03 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 57 | 24 | 12 |
| அலுவலக சிற்றூழியர் சேவை | 22 | 10 | 04 |
| சாரதி சேவை | - | 02 | 02 |
| **மொத்தம்** | **91** | **42** | **22** |

## பயிற்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ள சகல உத்தியோகத்தர்களதும் பயிற்சித் தேவைகளை இனம் கண்டு, இதற்று ஏற்ற விதத்தில் மனித வள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை,

- திட்டமிடுதல்.
- ஒழுங்கமைத்தல்.
- செயற்படுத்துதல் மற்றும் இதனுடன் இணைந்த ஏனைய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் ஆகிய நடவடிக்கைகள் இப்பிரிவினால் முக்கியமாக மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பிரிவின் பணியாட் தொகுதியானது கட்டுப்பாட்டாளர் (நிருவாகம்) மேற்பார்வையின் தலைமையில் தொழிற்படுவதுடன், பயிற்றப்பட்ட முகாமையாளரொருவரையும், அரச முகாமைத்துவ உதவியாளர்கள் மூவரையும், அலுவலக உதவியாளரொருவரையும் உள்ளக்கியுள்ளது.

## 2014ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள்

| செயலமர்வு நடத்தப்பட்ட திகதி | செயலமர்வு | யாருக்காக நடத்தப்பட்டது / திணைக்களம் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2014.01.01-08 | கடமை ஆரம்பப் பயிற்சி | வருடாந்த இடமாற்றல்களைப் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்களுக்காக | 30 |
| 2014.01.09 | துப்பரவேற்பாட்டு சேவைகள் பயிற்சி | துப்பரவேற்பாட்டு சேவைகள் பணியாட்தொகுதியினர் | 25 |
| 2014.01.10 | பாதுகாப்பு பணிகள் பயிற்சி | பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக | 20 |
| 2014.01.16 | அலுவலக முறைகள் மற்றும் அவை சார்ந்த நடைமுறைச் சிக்கல்கள் | சகல பிரதேச அலுவலக பணியாட்தொகுதியினருக்காக | 55 |
| 2014.01.20-24 | ஏனைய நாடுகளின் விமான நிலையங்களுடன் தொடர்புபட்ட பிரயாணிகளின் விடுவிப்பு பயிற்சி மற்றும் ஆவண பரிசீலனை | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக | 80 |
| 2014.02.20 | ஆங்கில அறிக்கைகளை தயார் செய்தல் | புதவிநிலை மற்றும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் | 35 |
| 2014.03.17-21 | கணனிப் பயிற்சி | முகாமைத்துவ உதவியாளர்களுக்காக | 50 |
| 2014.04.25 | எமது பிள்ளைகளை போட்டிப் பரீட்சைக்கு தயார் செய்வது எப்படி? | போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் பிள்ளைகளைக் கொண்ட பணியாட்தொகுதி பெற்றோருக்கு | 15 |
| 2014.05.08/09 | கணனிப் பயிற்சி | முகாமைத்துவ உதவியாளர்களுக்காக | 20 |
| 2014.05.15/16 | சட்டரீதியான அறிக்கைகளைத் தயார் செய்தல் | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக | 40 |
| 2014.05.30 | சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை மீட்டல் | திறந்த | 50 |
| 2014.06.06 | கணனிப் பயிற்சி | முகாமைத்துவ உதவியாளர்களுக்காக | 15 |
| 2014.06.09/10 | ஏனைய நாடுகளின் விமான நிலையங்களுடன் தொடர்புபட்ட பிரயாணிகளின் விடுவிப்பு பயிற்சி மற்றும் ஆவண பரிசீலனை | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக | 20 |
| 2014.06.17/18 | ஏனைய நாடுகளின் விமான நிலையங்களுடன் தொடர்புபட்ட பிரயாணிகளின் விடுவிப்பு பயிற்சி மற்றும் ஆவண பரிசீலனை | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக | 20 |
| 2014.06.25/26 | ஏனைய நாடுகளின் விமான நிலையங்களுடன் தொடர்புபட்ட பிரயாணிகளின் விடுவிப்பு பயிற்சி மற்றும் ஆவண பரிசீலனை | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக | 20 |
| 2014/07/09-11 | கணனிப் பயிற்சி | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக | 30 |
| 2014.08.21 | கடவுச் சீட்டு விநியோக செயன்முறை | பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் | 40 |
| 2014.09.04-05 | கணனிப் பயிற்சி | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக | 15 |
| 2014.09.11-12 | கடமை ஆரம்பப் பயிற்சி - 02 | தாமதமாக இடமாற்றல்களைப் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்களுக்காக | 40 |
| 2014.10.15-17 | கணனிப் பயிற்சி | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக | 40 |
| 2014.11.20 | கடவுச் சீட்டு விநியோக செயன்முறை | பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் | 45 |
| 2014.12.22-23 | உயரிய நுகர்வோர் உபசரிப்பு | சிரேஸ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் | 25 |

## 2014ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள்







# 03. கடவுச் சீட்டுக்களை விநியோகித்தலும் திருத்துதலும்

கடவுச் சீட்டுப் பிரிவானது இத்திணைக்களத்தின் சேவையினைப் பெறுவதற்கு மக்கள் அதிகமாக வருமை தரும் ஒரு பிரிவாகும். கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுதல், புதுப்பித்தல் மற்றும் இவற்றில் பல்வேறுபட்ட திருத்தங்களைச் மேற்கொள்வது தொடர்பாக தலைமை அலுவலகத்துக்கு மேலதிகமாக கண்டி, வவுனியா மற்றும் மாத்தறையில் 03 பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## <u>தலைமை அலுவலகம்</u>

குறித்த ஆண்டில் தலைமை அலுவலகத்தின் கடவுச் சீட்டுப் பிரிவினால் விநியோகிக்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.


| | அனைத்து நாடுகளுக்கும் | ஆவசர சான்றிதழ் (தம்பதிவ | மத்தியகிழக்கு | ஆடையாளச் சான்றிதழ் | இராஜதந்திர ரீதியிலான | உத்தியோகபூ | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **தலைமை அலுவலகம்** | 234,943 | 14,786 | 198,815 | 06 | 309 | 1,404 | | 449,902 |

### <u>2009 முதல் 2014 வரையில் கடவுச் சீட்டுக்களின் விநியோகம்</u>

### <u>(கடவுச்சீட்டுக்களின் வகைக்கேற்ப)</u>

| | அனைத்து நாடுகளுக் குமான | இராஜ தந்திர | ஆவசர சான்றித ழ் | ஆடை டயா ள சான் றிதழ் | மத்திய கிழக்குநாடு களுக்கான | உத்தியோ க பூர்வ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2014** | 234,943 | 309 | 14,786 | 6 | 198,815 | 1,043 | 449,902 |
| **2013** | 284,231 | 338 | 17,611 | 6 | 214,352 | 998 | 517,536 |
| **2012** | 303,524 | 288 | 35,697 | 4 | 230,482 | 899 | 570,894 |
| **2011** | 285,724 | 358 | 39,611 | 8 | 196,516 | 995 | 523,212 |
| **2010** | 278,242 | 396 | 28,792 | 7 | 199,621 | 891 | 507,949 |
| **2009** | 251,544 | 309 | 22,601 | 18 | 209,858 | 680 | 485,010 |

# இலங்கை கடவுச்சீட்டு விநியோகம் -2009முதல் 2014 வரை




## தலைமை அலுவலகத்துக்கு ஒரு நாட் சேவையின் மூலம் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக வருமை தந்துள்ளோர்



## தலைமை அலுவலகத்தின் ஊடாக கடவுச் சீட்டுக்களை விநியோகித்தல் -2014


| | அனைத்து நாடுகளுக் குமானை வ | அவசர சான்றிதழ் (தும்பதிவ செல்லுத ல்) | மத்திய கிழக்கு | உத்தியோ கபூர்வ | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கண்டி | 26,601 | 5,052 | 9,748 | 01 | **41,402** |
| வவுனியா | 14,245 | 485 | 4,990 | - | **19,720** |
| மாத்தறை | 12,733 | 1,235 | 2,437 | 01 | **16,406** |

## கடவுச் சீட்டுக்களின் திருத்தமும் புதுப்பித்தலும்

2014 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட இலங்கை கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை 87,486 ஆகும்.

### கடவுச் சீட்டுக்களின் திருத்தம் ( 2010 முதல் 2014 வரை)

| வகை | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| அனைத்து நாடுகளுக்கும் செல்லுபடியாதல் | 17,742 | 15,746 | 1,496 | 2,557 | 473 | 38,014 |
| ஒரு வெளிநாட்டுப் பயணத்துக்கு செல்லுபடியாதல் | 1,165 | 957 | 667 | 541 | - | 3,330 |
| ஒருவழிப் பயண வரையறையை இரத்துச் செயதல் | 1,527 | 1,356 | 1,264 | 1,309 | 1151 | 6,607 |
| இரட்டைப் பிரஜாவுரிமையை மாற்றுதல் | - | - | - | - | 11 | 11 |
| பிள்ளைகளை கடவுச் சீட்டிலிருந்து அகற்றுதல் | 2,384 | 2,659 | 2,656 | 2,361 | 2219 | 12,279 |
| அடையாள அட்டை இலக்கத்தை சேர்த்தல் | 2,513 | 1,906 | 1,496 | 1,671 | 2070 | 9,656 |
| பிள்ளைகளைச் சேர்த்தல் | 2,706 | 2,529 | 2,207 | 1,856 | 1496 | 10,794 |
| திருமணத்துக்கு முன்னரான பெயரை இடுதல் | 38 | 24 | 34 | 40 | 16 | 152 |
| பெயரை மாற்றுதல் | 4,275 | 4,449 | 3,984 | 3,399 | 3119 | 19,226 |
| திருமணத்துக்கு பின்னரான பெயரை இடுதல் | 2,323 | 2,211 | 2,224 | 2,036 | 2033 | 10,827 |
| ஏனைய திருத்தங்கள் (கட்டணமற்ற) | 111 | 121 | 137 | 151 | 81 | 601 |
| ஏனைய திருத்தங்கள்-01 | 28,970 | 29,043 | 33,316 | 27,462 | 28,669 | 147,460 |
| ஏனைய திருத்தங்கள்-02 | 1,027 | 1,418 | 1,363 | 995 | 913 | 5,716 |
| ஏனைய திருத்தங்கள்-03 | 28 | 56 | 28 | 27 | 17 | 156 |
| பெயர் மாற்றுதல் (ஏனைய) | 0 | 0 | 2 | 7 | 3 | 12 |
| பதவியை மாற்றுதல் | 50,046 | 46,542 | 47,347 | 55,655 | 66,922 | 266,512 |
| பதவியை மாற்றுதல் (கட்டணமற்ற) | 1 | 1 | 2 | 2 |  | 6 |
| காலத்தை நீடித்தல் | 115,337 | 59,084 | 28,740 | 10,384 | 2,368 | 215,913 |
| பிள்ளைகளின் புதிய புகைப்படங்களை சேர்த்தல் | 86 | 118 | 93 | 137 | 135 | 569 |
| மொத்தம் | **230,279** | **168,220** | **127,056** | **110,590** | **111,696** | **747,841** |




## வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கான கடவுச் சீட்டுக்களை விநியோகித்தல்

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களுக்கான விண்ப்பப்படிவங்கள் வெளிநாட்டு தூதுவராலயங்கள் பிரிவுக்கு முன்வைக்கப்படும். இதன் பிரகாரம், 2014ஆம் ஆண்டில் குறித்த பிரிவுக்கு 39,811 சேவை பெறுநர்கள் வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்திருந்தனர்.

# 04. வீசா பிரிவும் எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும்

வீசாக்களை விநியோகிக்கும் செயற்பாட்டின்போது இலங்கையின் தேசிய பாதுகாப்பின் பேணுகையை உறுதி செய்து தேசிய அபிவிருத்தியில் பங்கேற்பது வீசா கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் அடிப்படை நோக்கமாகக் காணப்படுகின்றது. 1948ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் பகுதி III இன் மூலம் இலங்கை பிரஜைகளல்லாதவர்கள் இலங்கைக்குள் வருவது கட்டுப்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் 1952ஆம் ஆண்டின் இலக்கம் 02 முதல் 35 வரையிலான குடிவரவு, குடியகல்வு விதிகளின் பிரகாரம் வீசா அனுமதிப்பத்திரங்களின் விநியோகமும் வீசா நீடிப்பும் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு இந்நாட்டில் சட்டரீதியாக தங்கியிருப்பதற்கான செல்லுபடியாகும் வீசாக்கள் இந்த பிரிவினால் வழங்கப்படுகின்றன.

### வீசா அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தலும் நீடித்தலும்

<u>2014 தேர்ச்சி</u>

2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான ஓராண்டு காலப்பகுதியினுள் முன் கூட்டிய அங்கிகாரம் வழங்கல், புதிய வீசாக்களை வழங்கல் மற்றும் நீடிப்புக்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

| இலக்கம் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | முன்கூட்டிய அங்கிகாரம் வழங்கல் | 12,482 |
| 02 | புதிய வீசா வழங்கல் ( வதிவிட வீசா) | 19,298 |
| 03 | வீசா நீடிப்பு | |
| | 1. வதிவிட வீசா | 22,008 |
| | 2. சுற்றுலா வீசா | 54,322 |
| 04 | சார்க் வீசா | 664 |

## அந்தந்த வீசா வகைகளின் கீழ் 2014.01.01முதல் 2014.12.31 வரையில் வீசா நீடிப்புக்களும் வழங்கலும்

| தொகுதி | நீடிப்புக்கள் | விநியோகம் | தூதுவராலயங்களுக்கு அனுப்பப்பட்ட பெக்ஸ் அறிவித்தல்கள் | விமானநிலையத்துக்கு அனுப்பப்பட்ட அறிவித்தல்கள் (Landing Endorsement) |
|---|---|---|---|---|
| முதலீட்டுச் சபைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள | 4015 | 2364 | 2948 | 129 |
| இலங்கை பெற்றோரின் பிள்ளைகள் | 141 | 169 | | |
| பிரஜைகள் சட்டத்தின் 5.2 பிரிவின் கீழ் | | 1581 | | |
| பிரஜைகள் சட்டத்தின் 5.1 பிரிவின் கீழ் | | 471 | | |
| துறவறத்தினர் | 852 | 266 | 242 | 29 |
| கடமை | 243 | 589 | 240 | 21 |
| இரட்டை பிரஜாவுரிமை (இலங்கை) | | 269 | | |
| முன்னர் இலங்கையர்களாக இருந்தவர்கள் | 2106 | 1475 | | |
| அரச சார்பற்ற நிறுவனங்கள் | 460 | 257 | 462 | 103 |
| தனியார் துறையில் கடமையாற்றும் | 2337 | 2432 | 1720 | 103 |
| பதிவுசெய்யப்பட்ட இந்தியர்கள் | 35 | 3 | | |
| மதம்சார்ந்த அலுவல்களுக்காக வருகை தந்தவர்கள் | 317 | 429 | 648 | 26 |
| விருந்தினர் வீசா (RGS) | 19 | 13 | | |
| இலங்கை பிரஜைகளின் துணைகள் | 3343 | 1016 | | |
| SSRV | 132 | 53 | | |
| அரசாங்கத் துறை சேவைக்கு வந்தவர்கள் | 3760 | 3805 | 3382 | 49 |
| மாணவ / புலமைப்பரிசில் பெற்றவர்கள் | 3868 | 3097 | 1747 | 168 |
| நீதிமன்ற ஆணைகள் | 83 | 12 | | |
| மருத்துவ காரணங்களுக்காக வருகை தந்தவர்கள் | 284 | 240 | 1 | |
| இராஜதந்திரரீதியான | 13 | 757 | 175 | 5 |
| **மொத்தம்** | **22008** | **19298** | **11565** | **633** |
| | **41306** | | **12198** | |
| **மொத்தம்** | **53504** | | | |

மேற்குறித்த கருமங்களுக்கு மேலதிகமாக பின்வரும் நடவடிக்கைகளும் இந்த வருடத்தினுள் வீசா பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

1. வீசா பிறப்பிப்பதற்கான நேர்முகப் பரீட்சையிலிருந்து வெளிவந்த விடயங்களுக்கு ஏற்ப அல்லது குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரணை செய்ததன் பின்னர் அல்லது வீசா வழங்குவதற்கு ஏதுவான நிறுவனங்கள் மற்றும் தொடர்பான நபர்களின் வேண்டுகோளின் பிரகாரம் வழங்கப்பட்ட வீசாக்களை இரத்துச் செய்தலும் கறைநிரல் பட்டியலில் சேர்த்தலும்.

2. 2014ஆம் ஆண்டில் ஏற்பட்ட தேசிய பாதுகாப்பு பற்றிய விசேட நிலமையின் கீழ் பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் சிரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்நாட்டுக்கு வருகை தருகையில் புலனாய்வும் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தி விடுவிப்பு (கிளியரன்ஸ்) பெற்றுக் கொள்ளுதல்.

3. யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் தேசிய பாதுகாப்பை மென்மேலும் உறுதிப்படுத்துப் பொருட்டு அரச சார்பற்ற அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்காக வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கான வீசாக்களை விநியோகிக்கையிலும் நீடிக்கையிலும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கான தேசிய செயலகத்தின் விதப்புரைகளைப் பெற்றுக் கொள்வது கட்டாயமானதாகும்.

4. கற்கை வீசாக்களைப் பெற்று நாட்டினுள் இருக்கும் மாலைதீவு மாணவர்கள், அவர்களில் தங்கி வாழ்வோர் மற்றும் பொறுப்பாளர்களின் எண்ணிக்கை கடந்த சில வருட காலத்தினுள் பாரியளவில் அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கான வீசாக்களைப் பெற்று இந்நாட்டுக்கு வருகை தரும் மாலைதீவு மாணவர்களும் தங்கி வாழ்வோரும் இந்நாட்டுக்கு வந்ததன் பின்னர் தமது வீசாக்களை கற்கை வீசாக்களாக மாற்றிக் கொள்வதற்கு இருந்த இயலுமையானது சிக்கலைத் தோற்றுவிப்பதாகக் கண்டறியப்பட்டது. முன்கூட்டிய அனுமதியின்றி இந்நாட்டுக்குள் வந்ததன் பின்னர் கட்டணம் செலுத்தாது மூன்று மாத காலம் சுற்றுலா வீசாவில் இருந்து ஒரேயடியாக வதிவிட வீசாவுக்கு விண்ணப்பிப்பதனாலும் அவர்களது பாடநெறிகள் தொடர்பில் எந்தவிதமான தலைமையகத்திடமிருந்தும் விதப்புரை பெற்றுக் கொள்ளாமையினாலும் மாலைதீவுக்கான கற்கை வீசா அனுமதிக்காக பெற்றுக் கொள்ளப்படுகின்ற தகவல்கள் போதியதாக இல்லையென தெளிவாகத் தெரிந்தது. ஆகவே, எதிர்காலத்திலும் மாலைதீவுக்கான கற்கை வீசாக்களை பிறப்பதற்கான தகுந்த கொள்கைகளை துரிதமாக தயார் செய்ய வேண்டுமென்பது புலனாகின்றது. இதன் கீழ் முழு நேர பாடநெறிகளை கற்போருக்கு மாத்திரம் கற்கை வீசா விநியோகித்தல் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், இதற்காக குறித்த கல்வி நிறுவனங்களிடமிருந்து தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான விசேட தகவல் சேகரிக்கும் படிவமொன்று தயார் செய்யப்பட்டது.

5. நைஜீரியா, கென்யா, கினிபிசவ், சூடான், உகண்டா, கொங்கோ ஆகிய நாடுகளில் பரவிய இபோலா தொற்று காரணமாக இலத்திரனியல் பயண அங்கிகார முறையைப் பயன்படுத்தி குறித்த நாடுகளின் வீசாக்களைப் பெறுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், அந்நாடுகளில் அமைந்துள்ள இலங்கைக்கான தூதுவராலயங்கள் ஊடாக மாத்திரம் வீசா விண்ணபப்படிவங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இதன்போது சுகாதார அமைச்சினால் விதப்புரை செய்யப்பட்ட மருத்துவ பரிசோதனையின் பின்னர் வீசா பிறப்பிக்கப்பட்டது:

6. விண்ணப்பப்படிவங்களை கணினி குறிப்பீடு இடும் செயன்முறை கடந்த வருடத்திலும் நடைமுறைப்படுத்தப்படாமையினால், ஒன்று திரண்டிருந்த வீசா ஆவணக் கோவைகளை வைப்பதற்கான இடப் பிரச்சினை எழுந்தது. ஐந்து வருடங்களைவிடப் பழைமையான பயன்படுத்தாத வீசா ஆவணக் கோவைகள் உரிய அங்கிகாரம் பெறப்பட்டு அகற்றப்பட்டதுடன், பிரிவின் இறுதி எல்லையில் சில சுவர் அலுமாரிகள் புதிதாகப் பொருத்தப்பட்டு, அவை விடயங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு ஆவணக் கோவைகளை வைப்பதற்காக ஒதுக்கப்பட்டது.

7. சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக வீசாப் பிரிவுக்கு வருகை தரும் சேவைபெறுநர்களுக்கு தமது விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்காக இரண்டு மேசைகள் மாத்திரமே காணப்பட்டதுடன், இவை இதற்காக எந்தவகையிலும் போதியதாக அமையவில்லை. ஆகவே, முன்னர் காணப்பட்டதையும்விட அளவில் பெரிய இரண்டு மேசைகள் வீசா வளாகத்தினுள் வைக்கப்பட்டன. மேலும், நலன்புரி சங்கத்தினால் வழங்கப்பட்ட இரண்டு தொலைக்காட்சிப் பெட்டிகளும் சேவைபெறுநர்களின் பயன்பாட்டுக்காக பொருத்தப்பட்டன.

8. வீசா பிரிவின் கட்டுப்பாட்டாளரான திரு. எம்.என்.ரணசிங்க திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகமாக ஒக்டோம்பர் மாதம் 14ஆம் திகதி பதவியுயர்வு பெற்றதுடன், சிரேஸ்ட பிரதி கட்டுப்பாட்டாளரான திரு.ஐ.சீ.பத்திராஜவின் மேற்பார்வையின் கீழ் வீசா பிரிவின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

9. கடவுச் சீட்டுப் பிரிவின் உதவி கட்டுப்பாட்டாளர்களுக்கு வீசா பிரிவின் அலுவல்கள் பற்றிய அறிவினை வழங்குவதற்காக வாரத்துக்கு ஒரு உதவிக் கட்டுப்பாட்டாளர் என்ற வகையில் வீசா பிரிவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதற்காக காணப்பட்ட வீசா கரும பீடங்கள் போதியதாக அமையாமையால் பிரிவுக்குள் உள்நுழைவதற்கான இடத்தைப் பயன்படுத்தி புதிய ஒரு கரும பீடம் அமைக்கப்பட்டதுடன், உள்நுழைவதற்காக வேறோர் இடத்தில் கதவு பொருத்தப்பட்டது.

10. வதிவிட வீசாக்களை பொறுப்பேற்றதற்கான பற்றுச் சீட்டுக்களை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும் ஆறாவது கரும பீடத்துக்கு பணியாட் தொகுதியின் நிரந்தர ஊழியரொருவர் இல்லாமையினால் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக புதிதாக நியமனம் பெற்று திணைக்களத்துக்கு வருகை தந்துள்ள ஒரு பெண் உத்தியோகத்தர் பயிற்றுவிக்கப்பட்டு இதில் ஈடுபடுத்தப்பட்டார்.

## 2015ஆம் ஆண்டுக்கான உத்தேச கருத்திட்டங்கள்

1. வீசா ஸ்டிகரைப் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை தயார் செய்தல்.

2. வீசா தகவல் தொகுதியை இற்றைப்படுத்தி இதன் குறைபாடுகளை நிவர்த்தி செய்தலும் தகவல் தொகுதியை தகவல் பகுப்பாய்வுக்கு பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதற்கான இயலுமையை மேம்படுத்துதல்.

3. வீசா தொகுதிகளுக்கான மிகவும் பொருத்தமான வீசா கொள்கைகளை மேம்படுத்துதல்.

4. வீசா விண்ணப்பப்படிவங்கள் மற்றும் துணை ஆவணங்களை ஸ்கான் செய்து கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கோவை முகாமைத்துவத்தை முறைப்படுத்துதல்.

5. வீசா பிரிவினுள் சேவைபெறுநர்களை நெறிப்படுத்துவதற்காக மிகவும் முறையாக இலக்க முறையொன்றை அறிமுகப்படுத்துதலும் பொதுமக்கள் அழைப்பு தொகுதி முறையை முறைப்படுத்துதலும்.

## இலத்திரனியல் பயண அங்கிகார முறை (ETA)

ஈ பயண அங்கிகாரத்தின் கீழ் 2014ஆம் ஆண்டில் வெளிநாட்டவர்களுக்காக Tourist ETA, Business ETA, Transit ETA மற்றும் Gratis ETA வழங்கல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. ETA முறைமையின் தரத்தை அதிகரிப்பதற்கும் சிக்கல்களின்றி தொடர்ச்சியாக தொழிற்படுவதற்கும் கீழே காட்டப்படும் புதிய உள்ளீடுகளும் தொழிற்பாடுகளும் முறைமையினுள் அமைக்கப்பட்டன.

1. Application error handling செயன்முறையொன்று தன்னிச்சையாக இடம்பெறும் வகையில் முறைமையை மாற்றல். இதன் மூலம் முறைமையில் சிக்கல் ஏற்பட்ட தருணத்திலேயே தேவையான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது.

2. Tourist , Business , Transit மற்றும் Gratis ETA இற்கான புதிய ஐ Approval Notice மாதிரிகளை அறிமுகம் செய்தல்.

3. இலங்கை மற்றும் ஏனைய நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் வீசா ஒப்பந்தங்களின் பிரகாரம் விடுவித்தல் பற்றிய தகவல்களை இணையத்தளத்தில் பிரசுரித்து இற்றைப்படுத்துதல்.

4. தேசிய பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இந்திய ETA விண்ணப்பப்படிவங்களுக்கு அரசாங்க புலனாய்வுப் பிரிவின் விசேட மேற்பார்வையின் பின்னர் அங்கிகாரம் வழங்கும் ஒரு செயன்முறையினை ஆரம்பித்தல்.

5. Business ETA ஐ விமானநிலைய கரும பீடத்தின் வழியாக வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல் நிலைமை காரணமாக Business ETA ஐ விமான நிலைய கரும பீடத்தின் வழியாக வழங்கும் நடவடிக்கை 2014-07-16ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டது.

6. ஆபிரிக்க குடாநாட்டில் பரவிய எபோல்லா வைரஸ் காரணமாக இலங்கைக்கு வருகை தரும் ஆபிரிக்க நாட்டவர் தொடர்பில் பாதுகாப்பான நடைமுறைகளைப் கடைப்பிடிக்குமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் ETA முறைமையில் மாற்றங்களை மேற்கொள்ளல்.

7. தற்காலிகமாக நிறுத்தப்படும் ETA அனுமதிக்காக குறித்த விண்ணப்பதாரர்களுக்கு அது பற்றி அறியத்தரும் ஒரு வழிமுறையை முறைமையினுள் தாபித்தல்.

8. On Arrival ETA வழங்கல் தொடர்பான தகவல்களை Front End முறைமையில் உட்புகுத்தக் கூடிய விதத்தில் முறைமையை அபிவிருத்தி செய்தல்.

9. அரசாங்க நிறுவனங்கள் ஒழுங்கமைக்கும் வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் வைபவங்களுக்கான Business ETA ஐ விமான நிலையத்துக்குள் பிரவேசிக்கும் ETA கரும பீடத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் முறைமையை அபிவிருத்தி செய்தல்.

10. ETA க்கு விண்ணப்பிக்கையில் வழங்கப்படும் தகவல்கள் பிழையாக அமைவதன் காரணமாக பிறப்பிக்கப்படும் தவறான ETA அங்கிகாரங்கள் மற்றும் கடவுச் சீட்டுக்களின் தகவல்கள் ஒன்றுக்கொன்று முரணாக அமைவதன் காரணமாக, விமான நிலையத்தின் உட்பிரவேச வாயில்களில் முகம் கொடுக்க நேரும் நெருக்கடிகளிலிருந்து வெளிநாட்டவர்களை மீட்டுக் கொள்ளும் முகமாக ETA Match Function அறிமுகம் செய்யப்பட்டது.

11. ஒரு குழுவாக ETA விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் வழங்கப்படும் ETA பற்றுச் சீட்டில் குழுவைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களினதும் கொடுப்பனவு பற்றிய விபரங்களை குறிப்பிடுதல்.

12. ETA முறையையின் மந்தமான போக்கினைத் தவிர்த்து அதனை பலம்பொறுந்தியதாக அமைக்கும் பொருட்டு குறித்த முறைமையில் சில மாற்றங்களைச் செய்தல்.

## துறைமுகம் மற்றும் விசாரணைப் பிரிவு

இலங்கையில் உரிய துறைமுகங்கள் ஊடாக இடம்பெறும் பிரயாணிகளின் வருகை மற்றும் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துதல் எல்லைக் கட்டுப்பாட்டின் முதன்மைப் பணியாகக் கருதப்படுவதுடன், இதனுடன் இணைந்த ஏனைய துணைச் சேவைகளை வழங்குவதும் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**விமான நிலையங்கள்**

I. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்
II. இரத்மலானை விமான நிலையம்
III. பலாலி விமான நிலையம்
IV. மத்தளை ராஜபக்ஷ விமான நிலையம்

**துறைமுகங்கள்**

I. கொழும்பு துறைமுகம்
II. காலித் துறைமுகம்
III. மாகம் றுகுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்
IV. திருகோணமலை துறைமுகம்
V. காங்கேசன்துறை துறைமுகம்
VI. தலைமன்னார் துறைமுகம்
VII. நுரைச்சோலை துறைமுகம்
VIII. ஒலுவில் துறைமுகம்

<u>மாகம் றுகுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்கள அலுவலகம்</u>











## இலங்கையர் மற்றும் வெளிநாட்டவர்கள் - வருகைதந்தவர்களினதும் வெளியேறியவர்களினதும் எண்ணிக்கை - 2014

| | **வருகை தந்தவர்களின் எண்ணிக்கை** | **வெளியேறியவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| இலங்கைப் பிரஜைகள் | 1263679 | 1311258 |
| வெளிநாட்டவர்கள் | 1610530 | 1604679 |
| **மொத்தம்** | **2874209** | **2915937** |








## ஒவ்வொரு துறைமுகத்தின் ஊடாகவும் வருகை தந்தவர்களினதும் வெளியேறியவர்களினதும் எண்ணிக்கை - 2014


| **தொடர் இல** | **துறைமுகம்** | **வருகை தந்தவர்கள்** | **வெளியேறிய வர்கள்** |
|---|---|---|---|
| 1 | கட்டுநாயக்க விமானநிலையம் | 2840257 | 2884765 |
| 2 | அம்பாந்தோட்டை துறைமுகம் | 122 | 173 |
| 3 | மத்தளை விமானநிலையம் | 4052 | 3256 |
| 4 | கொழும்பு துறைமுகம் | 6710 | 7196 |
| 5 | காலி துறைமுகம் | 22658 | 20143 |
| 6 | மன்னார் துறைமுகம் | 0 | 1 |
| 7 | திருகோணமலைத் துறைமுகம் | 398 | 384 |
| 8 | இரத்மலானை துறைமுகம் | 12 | 19 |
| | **மொத்தம்** | **2874209** | **2915937** |

**இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை கண்டங்களின் அடிப்படையில் -2014**

| மாதம் | ஆபிரிக்கா | ஆசியா | அவுஸ்திரேலியா | ஐரோப்பா | வடஅமெரிக்கா | தென் அமெரிக்கா | அடையாளம் காணப்படாத | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1291 | 173672 | 6889 | 73290 | 7673 | 322 | 77 | **263214** |
| பெப்ரவரி | 981 | 140127 | 4167 | 77318 | 6051 | 269 | 84 | **228997** |
| மார்ச் | 1219 | 162238 | 4495 | 64506 | 6716 | 278 | 79 | **239531** |
| ஏப்பிறல் | 1441 | 174226 | 6539 | 50803 | 6189 | 203 | 65 | **239466** |
| மே | 1381 | 160528 | 3845 | 25992 | 5510 | 215 | 166 | **197637** |
| ஜுன் | 1280 | 170214 | 5539 | 29309 | 7752 | 132 | 123 | **214349** |
| ஜுலி | 1247 | 172478 | 6489 | 64013 | 8014 | 219 | 56 | **252516** |
| ஓகஸ்ட் | 1574 | 190817 | 5670 | 57852 | 6757 | 190 | 83 | **262943** |
| செப்டெம்பர் | 1142 | 165091 | 5426 | 37059 | 4470 | 240 | 100 | **213528** |
| ஓக்தோம்பர் | 1540 | 164019 | 4795 | 45334 | 5962 | 242 | 110 | **222002** |
| நவம்பர் | 1241 | 162192 | 5781 | 53113 | 5610 | 272 | 135 | **228344** |
| டிசெம்பர் | 2100 | 208116 | 13669 | 76395 | 10908 | 428 | 75 | **311691** |
| **மொத்தம்** | **16437** | **2043718** | **73304** | **654984** | **81612** | **3010** | **1153** | **2874218** |




இலங்கைக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை கண்டங்களின் அடிப்படையில் -2014
2500000
2000000
1500000
1000000
500000
0
ஆபிரிக்கா
ஆசியா
அவுஸ்திரேலியா
ஐரோப்பா
வட அமெரிக்கா
தென் அமெரிக்கா
அடையாளம் காணப்படாத
மொத்தம்


இலங்கைக்கு மாதாந்தம் வருகை தந்த மற்றும் வெளியேறிய இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை-2014
350000
300000
250000
200000
150000
100000
50000
0
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்பிறல்
மே
ஜுன்
ஜுலி
ஒகஸ்ட்
செப்டெம்பர்
ஒக்தோம்பர்
நவம்பர்
டிசெம்பர்
மொத்தம்

| | வருகை தந்நவர்களின் எண்ணிக்கை | | | வெளியேறியவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | இலங்கைப் பிரஜைகள் | வெளிநாட்டவர்கள் | வருகை தந்தோரின் மொத்த எண்ணிக்கை | இலங்கைப் பிரஜைகள் | வெளிநாட்டவர்கள் | வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை |
| ஜனவரி | 108513 | 154701 | 263214 | 114613 | 173806 | 288419 |
| பெப்ரவரி | 81517 | 147480 | 228997 | 99665 | 151997 | 251662 |
| மார்ச் | 100688 | 138843 | 239531 | 102454 | 152194 | 254648 |
| ஏப்பிறல் | 119014 | 120452 | 239466 | 115186 | 127841 | 243027 |
| மே | 101126 | 96511 | 197637 | 105712 | 103736 | 209448 |
| ஜுன் | 104452 | 109897 | 214349 | 100331 | 101372 | 201703 |
| ஜுலி | 111459 | 141057 | 252516 | 95517 | 108942 | 204459 |
| ஓகஸ்ட் | 114226 | 148717 | 262943 | 127767 | 176085 | 303852 |
| செப்டெம்பர் | 101019 | 112509 | 213528 | 129879 | 114948 | 244827 |
| ஓக்தோம்பர் | 94113 | 127880 | 221993 | 103925 | 130882 | 234807 |
| நவம்பர் | 101694 | 126650 | 228344 | 101001 | 120233 | 221234 |
| டிசெம்பர் | 125858 | 185833 | 311691 | 115208 | 142643 | 257851 |
| **மொத்தம்** | **1263679** | **1610530** | **2874209** | **1311258** | **1604679** | **2915937** |

## ஓவ்வொரு மாதத்துக்கும் ஏற்ப வெளியேற்றம் - 2014




## இலங்கையிலிருந்து மாதாந்தம் வெளியேறியவர்களின் எண்ணிக்கை -2014



## கப்பல் மாலுமிகளின் வருகை

இலங்கைக்கு வருகை தரும் சகல கப்பல் துறை குழுக்களையும் சேர்ந்த சகல அங்கத்தவர்களிடமிருந்தும் ரூ.1,000/= அரச வரி அறவிடப்படும். இதற்கு மேலதிகமாக இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கு முன்னர் அவர் / அவள் பிணைப்பத்திரத்தில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

இந்த பிணையொப்பந்தத்தின் கட்டணத்தை அவரது / அவளது இந்நாட்டு பிரதிநிதியினால் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டும். சுங்க இலச்சினை பொறிக்கப்பட்ட ஸ்டிக்கரொன்று பிரதிநிதிக்கு துறைமுக கிளையினால் வழங்கப்படும்.

## உள்ளக குடிவரவு கட்டுப்பாடு

உள்ளகக் குடிவரவுக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தும் முகமான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களமானது சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- **இலங்கை கடவுச் சீட்டொன்றை இலங்கைக்கு வெளியில் அனுப்புதல் ( Courier)**

  குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகத்தின் எழுத்துமூலமான அனுமதியின்றி இலங்னை கடவுச் சீட்டொன்றை வெளிநாடொன்றுக்கு அனுப்புதல் தவறாகும்.

  யாதேனுமொரு நாட்டின் வீசாவினைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை கடவுச் சீட்டொன்றை நாட்டிலிருந்து வெளியில் அனுப்புவதற்கான அங்கிகாரம், குறித்த நாட்டின் தூதுவராலயம்/ உயர்ஸ்தானிகராலயம் இலங்கையில் காணப்படாத பட்சத்தில் மாத்திரமே வழங்கப்படுகின்றது.

- **மூன்றாவது தரப்பின் ஊடாக வெளிநாட்டு கடவுச் சீட்டொன்றை வெளியில் அனுப்பி வைத்தல்.**

### தேவையான ஆவணங்கள்

I. வெளிநாட்டு கடவுச் சீட்டினை அனுப்பிவைப்பதற்கு ஏதுவான காரணங்களைக் குறிப்பிட்டு கடவுச் சீட்டு உரிமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பக் கடிதம்.

II. வெளிநாட்டு கடவுச் சீட்டு உரிமையாளர் சார்பில் அவரது வெளிநாட்டு கடவுச் சீட்டினை எடுத்துச் செல்வதற்கு மூன்றாவது தரப்பினருக்கு அதிகாரம் வழங்கும் கடிதம்.

III. தேவையானவை பூர்த்தியானதன் பின்னர் ( உ-தா: வீசா பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர்) வெளிநாட்டு கடவுச் சீட்டினை அதன் உரிமையாளருக்கு மீளளிப்பதாக மூன்றாவது தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதம்.

- **வெளிநாடுகளுக்கு பயணமான பணியாளர்களின் குடிவரவு, குடியகல்வு தகவல்கள் உள்ளடங்கிய கடிதங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு சமர்ப்பித்தல்.**

- **குறிப்பிட்ட நபர்களின் வர்த்தகங்களைக் கலைவதற்கான நிலையமொன்றைப் பேணுதல்.**

# விசாரணைப் பிரிவு

செல்லுபடியாகும் குடிவரவு பத்திரங்கள் அல்லது செல்லுபடியாகும் வீசா அனுமதிப் பத்திரமின்றி வெளிநாட்டவரொருவர் இலங்கைக்குள் பிரவேசித்தல் / தங்கியிருத்தல் குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் பிரகாரம் குற்றமாகும்.

இதன் பிரகாரம், குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தை மீறுகின்ற வெளிநாட்டவர்கள் குறித்து ஆராய்ந்துபார்த்து, அவர்களை கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் நாட்டை விட்டு வெளியேற்றுதல் ஆகிய நடவடிக்கைகளை விசாரணைப் பிரிவு மேற்கொள்கின்றது.

**2014ஆம் ஆண்டில் தடுத்துவைக்கப்பட்டவர்களினதும் அகற்றப்பட்டவர்களினதும் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.**

| | **மாதம்** | **தடுத்து வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை** | **அகற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | ஜனவரி | 31 | 13 |
| 2 | பெப்ரவரி | 18 | 20 |
| 3 | மார்ச் | 13 | 15 |
| 4 | ஏப்பிறல் | 18 | 9 |
| 5 | மே | 5 | 5 |
| 6 | ஜுன் | 6 | 17 |
| 7 | ஜுலி | 4 | 13 |
| 8 | ஓகஸ்ட் | 11 | 1 |
| 9 | செப்டெம்பர் | 1 | 5 |
| 10 | ஓக்தோம்பர் | 3 | 6 |
| 11 | நொவெம்பர் | 9 | 8 |
| 12 | டிசெம்பர் | 12 | 12 |
| | மொத்தம் | **131** | **124** |

**இனரீதியிலான வகைப்படுத்தலுக்கு அமைய 2014ஆம் ஆண்டில் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டவர்களினதும் அகற்றப்பட்டவர்களினதும் எண்ணிக்கை**

| | இனம் | அனுப்பப்பட்வர்களின் எண்ணிக்கை | அகற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பங்களதேசத்தினர் | 6 | 8 |
| 2 | பிரித்தானியர் | 5 | 2 |
| 3 | எலிட்ரியனியர் | 2 | 2 |
| 4 | கனேடியர் | 2 | 2 |
| 5 | சீனர் | 10 | 5 |
| 6 | பிரெஞ் இனத்தவர் | 1 | 1 |
| 7 | ஜேர்மனியர் | 4 | 2 |
| 8 | இந்தியர் | 53 | 51 |
| 9 | ஈரானியர் | 11 | 9 |
| 10 | ஐரிஷ் இனத்தவர் | 1 | 1 |
| 11 | லைபீரியர் | 1 | 1 |
| 12 | மாலைதீவினர் | 0 | 1 |
| 13 | மாலி | 1 | 2 |
| 14 | மியன்மார் | 7 | 7 |
| 15 | நைஜீரியர் | 0 | 3 |
| 16 | பாகிஸ்தானியர் | 10 | 10 |
| 17 | பலஸ்தீனியர் | 3 | 3 |
| 18 | ரஷ்யர் | 2 | 2 |
| 19 | ஸ்பானியர் | 1 | 1 |
| 20 | சிரியா இனத்தவர் | 7 | 7 |
| 21 | துர்க்கியர் | 3 | 3 |
| 22 | யுக்ரேனிய இனத்தவர் | 1 | 1 |
| | **மொத்தம்** | **131** | **124** |

## உரிய காலத்தையும் விஞ்சி இலங்கையில் தங்கியிருத்தல்.

எவரேனும் ஒரு நபர் உரிய காலத்தையும் விஞ்சி தொடர்ந்து இந்நாட்டில் தங்கியிருப்பதாகத் தெரிய வருமிடத்து,குறித்த நபரைக் கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் நாட்டை விட்டு வெளியேற்றுதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அவர் அல்லது அவள் மீண்டும் இந்நாட்டுக்குள் வருவதை தடுக்கும் முகமாக அவர் அல்லது அவளது பெயர் கறை நிரல் பட்டியலில் சேர்க்கப்படும்.

இது குறித்து அவர் அல்லது அவள் வெளியேறும் போது கண்டு பிடிக்கப்படுமிடத்து சந்தர்ப்பத்துக்கமைய வீசா கட்டணங்களையும் தெண்டப் பணத்தையும் செலுத்த வேண்டியதுடன், அவர் அல்லது அவளது பெயர் சோதனைப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படும். அவர் அல்லது அவள் மீண்டும் இந்நாட்டுக்கு வருகை தருகையில் அவர் அல்லது அவளை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்த முடியும்.

அவர்/அவள் தெண்டப் பணத்தை செலுத்தாத பட்சத்தில் அவரது / அவளது பெயர் கறை நிரல் பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் அவர் / அவள் மீண்டும் இந்நாட்டுக்குள் வருகை தருவது தடை செய்யப்படும்.

## விசேட பணிகள், வெற்றிகள் மற்றும் சவால்கள்

- அகதிகளாக புகழிடம் கோருவோராக இலங்கையினுள் தங்கியிருந்த 329 பாகிஸ்தானியர்களும் 88 ஆப்கானிஸ்தானியர்களும் அவர்களது தாய் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.
- அனைத்து விமான நிலையங்களினதும் துறைமுகங்களினதும் எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் முன்னேற்றத்துக்காக ஆற்றிய சேவையினைப் பாராட்டும் வகையில் பிரதி கட்டுப்பாட்டாளருக்கு (துறைமுக மற்றும் விசாரணைப் பிரிவு) 2014.01.01ஆந் திகதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் நினைவுச் சின்னமொன்று வழங்கி வைக்கப்பட்டது.

**வெளிநாட்டு பணியாட் தொகுதியினருக்காக விநியோகிக்கப்பட்ட முறிகள் - 2014ஆம் ஆண்டு**

| மாதம் | முறி வருமானம் | குரியர் சேவை வருமானம் |
|---|---:|---:|
| ஜனவரி | 4,138,000.00 | 1,734,000.00 |
| பெப்ரவரி | 3,678,000.00 | 1,774,000.00 |
| மார்ச் | 3,753,000.00 | 2,223,000.00 |
| ஏப்பிறல் | 3,931,000.00 | 2,055,000.00 |
| மே | 4,016,000.00 | 2,435,000.00 |
| ஜூனி | 3,319,000.00 | 2,841,000.00 |
| ஜூலி | 3,624,000.00 | 2,617,000.00 |
| ஓகஸ்ட் | 4,132,000.00 | 2,437,000.00 |
| செப்டெம்பர் | 3,826,000.00 | 2,098,000.00 |
| ஓக்தோம்பர் | 3,771,000.00 | 2,144,000.00 |
| நவம்பர் | 3,588,000.00 | 2,114,000.00 |
| டிசெம்பர் | 4418,000.00 | 1,769,000.00 |
| **மொத்தம்** | **46,194,000.00** | **26,241,000.00** |

# 05.தகவல் தொழிநுட்பமும் கருமமாற்றுதலும்

தற்போது காணப்படுகின்ற மென் மற்றும் வன்பொருட்களை தடைகள் இன்றி முன்னெடுத்துச் செல்வதும் மக்களுக்கு உயரிய சேவையினை வழங்கும் அதே கணம் அரசாங்கத்துக்கு குறைந்த செலவினை ஏற்படுத்தும் வகையில் அமைந்த புதிய முறைகளை அறிமுகம் செய்து தகவல் முறைமையை மேம்படுத்துவதற்காக தொழிற்படுவதுமே தகவல் தொழிநுட்பப் பிரிவின் அடிப்படை கடமையாகக் காணப்படுகின்றது.

மேலும், இந்த நிறுவனத்தின் கணினி முறைமைக்கு சேவைகளை வழங்கும் வெளி நிறுவனங்களுடன் உரிய விதத்தில் ஒப்பந்தங்களை இற்றைப்படுத்துவதும், ஒப்பந்தங்களின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதும், மேற்பார்வை செய்வதும் இந்தப் பிரிவின் இன்னுமொரு பணியாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட முதன்மைப் பணிகளுக்கு மேலதிகமாக பின்வரும் விசேட பணிகளும் தகவல், தொழிநுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) 1. பொதுமக்களது தேவைகளில் கூறுணர்வுடன் செயற்பட்டு, காணப்படுகின்ற ஐந்து கணினி மென்பொருள் மொடியூல்களுக்கும் அடையாளம் காணப்பட்ட மேம்பாடுகளை மேற்கொண்டு சேவை வினைத்திறனை உயர்த்துதல்.

2. இலங்கை தகவல் தொடர்பாடல், தொழிநுட்ப பிரநிதி நிறுவனத்தின் (ICTA) ஆலோசனையுடன் திணைக்களத்தின் சகல பிரிவுகளினதும் ஆவணங்களைத் தயார் செய்கையில் பொதுவான ஒரு சிங்கள எழுத்துப் பயன்பாட்டுக்குத் தேவையான மென்பொருட்களை தயார் செய்தல்.

3. திணைக்களத்துக்காக பத்தரமுல்லையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கட்டிட தொகுதியில் கணினி முறைமையை சிறப்பாக தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

4. தேசிய பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் குடிவரவு, குடியகல்வு நடவடிக்கைகளை மென்மேலும் பாதுகாப்பான விதத்தில் மேற்கொள்ளும் முகமாக பிறிதொரு நாட்டின் விமான நிலையத்தினால் நாட்டுக்குள் பிரவேசிக்கும் மற்றும் இந்நாட்டினால் வெளியேறுவதற்கு அங்கிகாரம் வழங்கப்படும் விமானத்தில் உள்ள பிரயாணிகள் பற்றிய தரவுகளை குறித்த விமானங்கள் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில், விமானக் கம்பனிகளிடமிருந்து குறித்த தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக அப்போது காணப்பட்ட Advance Passenger Information(API) முறையை Advance Passenger Processing (APP) வரை மேம்படுத்துவதற்கு திட்டமிடுதல்.

5. விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் தேவைக்காக பண்டாரநாயக்க விமான நிலையத்தின் Server room ஐ நவீனமயப்படுத்தி புதிய ஒரு இடத்தில் தாபித்தல்.

**(2) காணாமற் போன, களவாடப்பட்ட கடவுச் சீட்டுக்கள் தொடர்பான பிரிவு (SLTD)**

காணாமற் போன, களவாடப்பட்ட கடவுச் சீட்டுக்கள் பற்றி பொலிஸ் நிலையத்தினால் வழங்கப்படும் தகவல்கள், மத்திய தகவல் பணியகம் அல்லது வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகத்தினால் நேரடியாக அல்லது திணைக்களத்துக்கு தகவல்கள் பரிமாற்றப்படும். அவற்றை விசாரித்து, குறித்த கடவுச் சீட்டுக்களை மீளவும் பயன்படுத்த முடியாத வகையில் இரத்துச்செய்து, சர்வதேச பொலிஸாருக்கு (INTERPOL) அனுப்பப்படும். அத்தகைய ஒரு கடவுச் சீட்டினைப் பயன்படுத்தி பிறிதொரு நபர் வெளிநாடொன்றுக்கு செல்வதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன்,

அத்தகைய சட்டத்துக்கு முரணான விடயங்கள் இடம்பெறுவதைத் தடுப்பது ( SLTD) முறைமையின் முதன்மைப் நோக்கமாகும்.

2014.01.01 முதல் 2014.12.31 ஆம் திகதி வரையில் மத்திய தகவல் பணியகம் ( NCB) மற்றும் வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகத்தினால் ( SLDM) 7865 கடவுச் சீட்டுக்கள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், 5348 கடவுச் சீட்டுக்கள் சர்வதேச பொலிஸாரின் தகவல் முறைமைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இராஜ்யத்திலேயே அதிகமான கடவுச் சீட்டுக்கள் காணாமற் போயுள்ளன. அது 151 ஆகும். அடுத்ததாக சிங்கப்பூர் இடம்பிடிப்பதுடன், அது 22 ஆகும்.

**(3)ஒருங்கிணைந்த தகவல் முகாமைத்துவப் பிரிவு (IEMS)**

குடிவரவு, குடியகல்வு தகவல்கள் மற்றும் புள்ளி விபரங்களை வழங்குவதற்காக ஒருங்கிணைந்த தகவல் முகாமைத்துவப் பிரிவு ( IEMS) தாபிக்கப்பட்டது. இது இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் நேரடியான தொடர்புகளை மேற்கொள்ளும் பிரிவாக காணப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் வீசா விநியோகத்துக்கு முன்னர் வெளிநாட்டு கடவுச் சீட்டுக்கள் குறித்து உண்மை நிலையை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதும் இந்த பிரிவின் ஊடாகவாகும்.

2014.01.01 முதல் 2014.12.31ஆம் திகதி வரையில் எமது திணைக்களத்தின் ஊடாக 2630 விசாரணைகளுக்கு பதில் நல்கப்பட்டுள்ளது.

| **இலக்கம்** | **நிறுவனம்** | **மொத்தம்** |
|---|---|---|
| 01 | ஜேர்மன் தூதுவராலயம் | 469 |
| 02 | பிரெஞ் தூதுவராலயம் | 88 |
| 03 | நோர்வே தூதுவராலயம் | 86 |
| 04 | சுவிட்ஸ்சர்லாந்து தூதுவராலயம் | 302 |
| 05 | நெதர்லாந்து தூதுவராலயம் | 3 |
| 06 | அமெரிக்கா தூதுவராலயம் | 359 |
| 07 | இத்தாலி தூதுவராலயம் | 15 |
| 08 | அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயம் | 104 |
| 09 | கனடா உயர் ஸ்தானிகராலயம் | 133 |
| 10 | ஜக்கிய இராஜ்ஜிய உயர் ஸ்தானிகராலயம் | 183 |
| 11 | இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயம் | 2 |
| 12 | பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் | 872 |
| 13 | இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவு | 5 |
| 14 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 9 |
| | **மொத்தம்** | **2630** |

# 06.பிரஜாவுரிமை பிரிவு

1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க பிரஜாவுரிமை சட்டத்தின் மூலம் பிரஜாவுரிமை பிரிவுக்கான நியாயாதிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிரஜாவுரிமை சட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிறைவேற்று உத்தியோகபூர்வ அதிகாரமானது குறித்த நிரல் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரஜாவுரிமை சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் நிறைவேற்று நடைமுறைகள் குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு தூதுவர் அலுவலகங்கள் ஊடாக கடவுச் சீட்டு விநியோகச் செயற்பாட்டுடன் நேரடியாகத் தொடர்பு படுவதனால் பிரஜாவுரிமை பிரிவானது குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

பிரஜாவுரிமை பிரிவினால் 1948ஆம் ஆண்டு 18ஆம் இலக்க பிரஜாவுரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வரும் அடிப்படைப் பிரிவுகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. சட்டத்தின் 5(2) பிரிவின் மூலம் வெளிநாடுகளில் பிறந்த இலங்கையரின் பிள்ளைகள் இலங்கையில் பதிவு செய்யப்படுகின்றனர்.
2. சட்டத்தின் 19ஆவது பிரிவின் பிரகாரம் இரட்டை பிரஜாவுரிமையை வழங்குதல்.
3. சட்டத்தின் 11,12,13 பிரிவுகளின் பிரகாரம் பதிவு செய்வதன் ஊடாக பிரஜாவுரிமையை வழங்குதல்.
4. சட்டத்தின் 5 மற்றும் 8ஆவது பிரிவுகளின் பிரகாரம் பரம்பரை வழி பிரஜாவுரிமைக்கான அலுவல்களை மேற்கொள்ளுதல்.

**<u>பிரஜாவுரிமைகள் சட்டத்தின் பிரகாரம் 2014.01.01 முதல் 2014.12.31ஆம் திகதி வரை விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்கள்</u>.**

| பிரஜைகள் சட்டத்தின் ஏற்புடைய பிரிவு | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5(2) பிரிவு | 8155 | 8450* |
| 8 பிரிவு | 6 | 5 |
| 11 பிரிவு | 54 | 22 |
| 12 பிரிவு | 13 | 10 |
| 19 பிரிவு | 293 | 255 |
| 19(1) பிரஜாவுரிமையைக் கைவிடல் | 87 | 87 |

* கடந்த ஆண்டில் கிடைக்கப்பெற்ற, சான்றிதழ்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களுக்கான சான்றிதழ்கள் 2014ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

**2014ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட விசேட பணிகள்**

1. இரட்டை பிரஜாவுரிமை தொடர்பாக லெஜர்களில் காணப்பட்ட அனைத்துத் தரவுகளும் முறைமைக்குள் உள்வாங்கப்பட்டது.
2. முறைமையினால் இரட்டை பிரஜாவுரிமை சான்றளிக்கப்பட்ட பிரதிகளின் விநியோகமானது 2014ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
3. பிரஜாவுரிமை தகவல் முறைமையை ஏனைய தகவல் முறைமைகளுடன் ஒருங்கிணைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# 07.இந்து இலங்கை பிரஜாவுரிமை பிரிவு

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்குதல் மற்றும் அதனுடன் இடைநேர்விளைவான பணிகளை ஆற்றுதல் இந்த பிரிவின் பொறுப்பாகும். மேற்படி பணிகளை ஆற்றுகையில் ஏற்புடையதாகும் சட்டங்கள் பின்வருமாறாகும்.

1) 1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க பிரஜாவுரிமைகள் சட்டம்.

2) 1949ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இந்திய மற்றும் பாகிஸ்தானிய வசிப்பாளர்களது பிரஜாவுரிமை பற்றிய சட்டம்.

3) 1967ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இந்து இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் சட்டம் (சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம்)

4) 1988ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க பின்னுரிமையாளர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டம்.

5) 2003ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டம்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக இலங்கையில் வாழும் சீன வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கும் பொறுப்பு 2008ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், இச்சட்டத்தின் அமுலாக்கமானது 2013.10.30 ஆம் திகதியுடன் முடிவுற்றது. இதன் பிரகாரம் இது தொடர்பில் இந்தப் பிரிவுக்கு கையளிக்கப்பட்டிருந்த பொறுப்பும் கடமைகளும் அத்திகதியுடன் நிறைவுற்றன. 2008ஆம் ஆண்டு முதல் 2013.10.30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் 94 சீன வம்சாவளியினருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளியினருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்குவது தொடர்பாக தற்போது அமுலிலுள்ள 1988ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க மற்றும் 2003ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க சட்டங்களின் கீழ் கடந்த ஆறு வருட காலப் பகுதியினுள் பிரஜாவுரிமை சான்றிதழ் வழங்கும் நிலைப்பாடு கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|
| 1) 1988இலக்கம் 39 | 172 | 106 | 71 | 14 | 09 | 19 |
| 2)2003இலக்கம் 35 | 24 | 61 | 04 | 08 | 02 | 03 |
| 3)2003 இலக்கம் 35 இன் கீழ் அறிவித்தல் கடிதங்களை வழங்குதல் | | 23 | 13 | - | 01 | - |

மேலும், பதிவு செய்தலின் மூலம் பிரஜாவுரிமையினைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் தமது பதிவு தொடர்பான தகவல்களை நிரூபிக்கும் கடிதங்கள் இந்த பிரிவின் ஊடாக வழங்கப்படுவதுடன், 2014ஆம் ஆண்டினுள் அத்தகைய 60 கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# 08.அபிவிருத்தி, கொள்கை மற்றும் சட்ட நடவடிக்கைகள்

இந்தப் பிரிவினால் 2014ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட பணிகளை நோக்குகையில், 2014ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையை தயார் செய்தல்( **Action Plan-2014)** , 2013ஆம் ஆண்டுக்கான நிருவாக அறிக்கையை தயார் செய்தல், திணைக்களத்தினால் பல்வேறு நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட வேண்டிய தேர்ச்சி அறிக்கை ஆகியவற்றை தயார் செய்து குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் திணைக்களத்தின் தேவைக்கேற்ப அமைச்சரவை நிருபங்களைத் தயார் செய்து, அமைச்சரவை அங்கிகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை முக்கிய இடம் வகிக்கின்றன. 2014ஆம் ஆண்டினுள் தயார் செய்யப்பட்ட அமைச்சரவை பத்திரங்களும் கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அங்கிகாரங்களும் பின்வருமாறாகும்.

## 2014ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபங்கள்

**01**. உயிரியல் ஆயளவை கடவுச் சீட்டுக்களை அறிமுகம் செய்தல் தொடர்பான அமைச்சரவை நிருபம்

**02.** இரட்டைக் குடியுரிமை வழங்கலை முறைப்படுத்துதலும் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர் பிரேரணை முறையை தாபிப்பதற்காக 1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க குடியுரிமைச் சட்டத்தை திருத்துவதற்கான அமைச்சரவை நிருபம்.

**03.** இராஜதந்திர வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களைக் கொண்டுள்ள நபர்களை வீசா அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதிலிருந்து விடுவிப்பதற்காக இலங்கை சனாநாயக சோசலிச குடியரசு மற்றும் றோமேனிய அரசாங்கத்துடன் புரிந்துகொள்ளப்படும் ஒப்பந்தம் பற்றிய அமைச்சரவை நிருபம்.

**04.** இலங்கை கடவுச் சீட்டுக்களை விநியோகிக்கும் நடவடிக்கைக்காக உயிரியல் ஆயளவை (Biometrics ) தரவுகளை பயன்படுத்துவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை வழங்குவதற்காக 1948ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க குடிவரவு, குடியகல்வு சட்டத்தை திருத்துவதற்கான அமைச்சரவை நிருபம்.

**05.** பத்தரமுள்ளையில் நிர்மாணிக்கப்படும் ஆள் அடையாள செயலக கட்டிடத்தினுள் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தை தாபிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வது குறித்த அமைச்சரவை நிருபம்

**06.** வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை அச்சிடுதலும், உயிரியல் ஆயளவுகளை உட்புகுத்தும் கனிணி தொகுதிக்கான அனர்த்த நிவாரண உதவி தொகுதி பற்றிய அமைச்சரவை நிருபம்.

இதற்கு மேலதிகமாக 2014ஆம் ஆண்டில் இந்த பிரிவுக்கு பொறுப்பளிக்கப்பட்ட விசேட பொறுப்பாக, பத்தரமுள்ளையில் நிர்மாணிக்கப்படும் ஆள் அடையாள செயலக கட்டிடத்தினுள் 2015ஆம் ஆண்டில் திணைக்களத்தை தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல். இந்த விடயத்தில் இதற்குத் தேவையான நிதி மற்றும் பௌதீக வளங்களை மதிப்பீடு செய்வதும் அலுவலக திட்டத்தை (Partitional Plan ) தயார் செய்வதும் மேற்கொள்ளப்படுவதுடன், கட்டிட திணைக்களம் மற்றும் தொடர்பான ஏனைய நிறுவனங்களுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

# சட்டப் பிரிவு

திணைக்களம் சார்ந்த சட்டரீதியான நடவடிக்கைகள் பிரதி கட்டுப்பாட்டளரொருவரின் வழிகாட்டலின் கீழ் அபிவிருத்தி, கொள்ளை பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. 2014ஆம் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டரீதியான கருமங்கள் மற்றும் பணிகள் பீழே குறிப்பிடப்படுகின்றன.

1. உயிரியல் ஆயளவை கடவுச் சீட்டுக்களை விநியோகிக்கும் கருத்திட்டம் தொடர்பாக 1948ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க குடிவரவு, குடியகல்வு சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை மேற்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தேவையான விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அல்லது சட்டத்தை செயற்படுத்தும் பிறிதொரு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் வழக்குத் தொடுகையின்போது, குறித்த வழக்குகளில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஒரு சாட்சியாளாராகப் பெயர் குறிக்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில், சாட்சியம் வழங்குவதற்காக குறித்த ஆவணங்களுடன் திணைக்களத்தை பிரநிதித்துவப்படுத்தி 123 தடவைகளில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3. திணைக்களமும் தனிப்பட்ட ரீதியில் கட்டுப்பாட்டாளர் நாயகமும் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அத்தகைய 04 உயர் நீதிமன்ற விண்ணப்பங்கள் தொடர்பில் தேவையான அவதானிப்புக்களை ஏற்படுத்துவதற்கும் தேவையான ஆவணங்களை நீதிமனறத்துக்கு ஆற்றுப்படுத்துவதற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. நீதிமன்ற தீர்ப்புக்களை அமுல்படுத்துவதற்காக, குறித்த நீதிமன்ற பதிவாளர்கள் குறித்த நீதிமன்ற தீர்ப்புக்களை இந்த திணைக்களத்துக்கு முன்வைக்கையில், குறித்த தீர்ப்புக்களில் காணப்படும் குறைகள் தொடர்பில் குறித்த நீதிமன்ற பதிவாளர்களுக்கு அறிவிப்பதற்காக 648 கடிதங்கள் தயார் செய்யப்பட்டு, குறித்த நீதிமன்ற பதிவாளர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

5. திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் பிரதி கட்டுப்பாட்டாளர் (சட்டம்)2014ஆம் ஆண்டினுள் 13 சந்தர்ப்பங்களில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

6. திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட 06 ஒப்பந்தங்களுக்குத் தேவையான அவதானிப்புக்களை சமர்ப்பித்து, 2013 ஆம் ஆண்டுக்காக அவற்றை மீள புதுப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7. குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் 9 தடவைகளில் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தேவையான தகவல்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8. திணைக்களமானது உள்நாட்டு நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட 24 ஒப்பந்தங்களுக்கான அவதானிப்புக்களை சமர்ப்பித்துள்ளது.

# 09.நிதி முகாமைத்துவம்


குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவமானது நிதிப் பிரிவின் பிரதான விடயப் பொறுப்பாக அமைந்துள்ளது. வருமானம் ஈட்டும் ஒரு திணைக்களமாகத் தொழிற்படும் இத்திணைக்களத்தின் வரவு செலவு மீதான முகாமைத்துவம், அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளை குறிப்பிட்ட வரையறைக்குள் நடத்திச் செல்லுதல், திறைசேரியின் நியமங்களுக்கமைய நிதி நடவடிக்கைகளை கையாளுதல் மற்றும் ஆண்டு இறுதியில் கணக்கறிக்கைகளை சமர்ப்பித்தர் ஆகியன பிரதம கணக்காளர்,கணக்காளர்( கொடுப்பனவு)மற்றும் கணக்காளர்(பெறுகை) ஆகிய மூன்று உத்தியோகர்களது மேற்பாரவையின் கீழ் இடம் பெறுகின்றது.

## I. வருமான இலக்குகளும் தேர்ச்சியும்

2014ஆம் ஆண்டில் திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த வருமான இலக்கு ரூ 7,173.25 மில்லியனாகக் காணப்படுவதுடன், உழைக்கப்பட்ட உண்மையான வருமானம் ரூ. 8,150.90 மில்லியனாகும். இதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சிய ஒரு வருமானம் உழைக்கப்பட்டுள்ளதுடன், இது எதிர்பார்க்கப்பட்ட வருமான இலக்கினை விட 14 மடங்கு அதிகரிப்பாகும்.

**<u>2014 ஆம் ஆண்டில் திணைக்களமானது பிரதான வருமான மூலங்களிலிருந்து திரட்டிய வருமானம் கீழே காட்டப்பட்டுள்ளது.</u>**

| | | |
|---|---|---|
| i | கடவுச் சீட்டு வழங்கல் மற்றும் திருத்தம் | 2,133,548,086.72 |
| ii | வெளிநாட்டு தூதரகங்கள் ஊடான கடவுச் சீட்டு பணிகள் | 1,064,296,090.86 |
| iii | துறைமுக நடவடிக்கைகள | 72,488,000.00 |
| iv | வீசா நடவடிக்கைகள் | 800,098,822.78 |
| v | இலத்திரனியல் வீசா நிகழ்ச்சித் திட்டம்(நுவுயு) | 4,034,041,937.35 |
| vi | பிரஜைகள் பிரிவு | 46,423,010.00 |
| | **மொத்தம்** | **8,150,895,947.71** |




## II. மதிப்பிடப்பட்ட செலவும் உண்மையான செலவும்

2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் செலவுகளுக்காக நிதியீட்டம் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ2,375.95 மில்லியனாகும். இதில் ரூ. 880.85 மில்லியன் மீண்டுவரும் செலவுகளுக்காகவும், ரூ.1,495.1 மில்லியன் மூலதனச் செலவுகளுக்கும் ஒதுக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் மொத்த உண்மையான செலவு ரூ1,453.45 மில்லியனாகக் காணப்படுவதுடன், இதில 55.9 வீதம் திணைக்களத்தின் மீண்டுவரும் செலவுகளுக்காகவும், 44.1 வீதம் திணைக்களத்தின் மூலதனச் செலவுகளுக்காகவும் செலவிடப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டில் முக்கியமாக வெற்று கடவுச் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கும், வீசா ஸ்டிகர் லேபள்களுக்காகவும் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 2014ஆம்ஆண்டுக்கான செலவு மதிப்பீடுகளும் செலவும

| இலக்கம் | | செயற்பாடுகள் | செலவு மதிப்பீடு2014(ரூ. ஆயிரத்தில்) | தேர்ச்சி | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதி (ரூ.ஆயிரத்தில்) | ரு |
| 1 | | ஆட்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | 424,400 | 418,611 | 98.64 |
| 2 | | ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 456,450 | 394,043 | 86.33 |
| | | **மீண்டுவரும் செலவுகள்** | **880,850** | **812,654** | **92.26** |
| | | **நிதி சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | | | |
| 3 | 2001 | கட்டிடம் மற்றும் நிர்மாணப்பணிகள் | 4,100 | 3,828 | 93.37 |
| 4 | 2002 | கருவிகள் மற்றும் இயந்திரங்கள் | 55,000 | 22,861 | 41.57 |
| 5 | 2003 | வாகனங்கள | 3,500 | 3,492 | 99.77 |
| | | **நிதிச் சொத்துக்களை கைப்பற்றுதல்** | | | |
| 6 | 2102 | வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றுட் அலுவலக உபகரணங்கள் | 1,500 | 1,498 | 99.87 |
| 7 | 2103 | கருவிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் | 23,000 | 14,523 | 63.14 |
| | | **மனிதவள அபிவிருத்தி** | | | |
| 8 | 2401 | பணியாட்தொகுதியினர் பயிற்சி | 6,000 | 2,178 | 36.30 |
| | | **ஏனைய நிதிச் செலவு** | | | |
| 9 | 2502 | **முதலீடு** | | | |
| | | 01. வெற்று கடவுச் சீட்டுக்கள் மற்றும் உரிய பாகங்கள் | 600,000 | 578,845 | 96.47 |
| | | 02. உயிரியல் ஆயளவை கடவுச் சீட்டுக்களை அறிமுகப்படுத்துதல் | 600,000 | - | |
| | | 03. இயந்திரத்தின் உதவியுடன் வாசிக்கக்கூடிய வீசா ஸ்டிகர் லேபல் | 15,000 | - | |
| | | 04. ஆவணங்கள் ஸகேன் பண்ணுதல் | 150,000 | - | |
| | | 05. வீசா ஸ்டிகர் லேபல் | 30,000 | 13,574 | 45.25 |
| | | 06. இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களுக்கான அட்டைகளை வழங்குதல் | 2,000 | - | |
| | | 07. கடவுச் சீட்டு மற்றும் வீசா பிரிவுகளுக்கான வரிசை முகாமைத்துவ முறை | 5,000 | - | |
| | | **மொத்த மூலதனச் செலவு** | **1,495,100** | **640,799** | **42.86** |
| | | **மொத்தம்** | **2,375,950** | **1,453,453** | **61.17** |

# 10. வழங்கல் நடவடிக்கைகள்

வழங்கல் பிரிவானது ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் அந்த வருடத்துக்கான வழங்கல் திட்டத்தை தயார் செய்கின்றது. இந்த வழங்கல் திட்டத்துக்கமைய பண்டங்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்படுவதுடன், 2014ஆம் ஆண்டின் தேர்ச்சி கீழே காட்டப்பட்டுள்ளது.

| பொருள் | பொருட்களின் பெறுமதி |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 338,897.00 |
| வளிச்சீராக்கி இயந்திரம் | 2830,358.71 |
| அச்சியந்திரம், பெக்ஸ் இயந்திரம் மற்றும் ஒளிப்பிரதி இயந்திரம் | 835,600.00 |
| கணினி முறைமை சார்ந்த உபகரணங்கள் | 315,945.00 |
| வாகனங்கள் | - |
| **மொத்தம்** | **4320800.71** |

# 11.நலன்புரி சங்கத்தினால் 2014ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்

சுமார் ஆயிரம் திணைக்கள பணியாட் தொகுதியினரை அங்கத்தவர்களாக உள்ளடக்கிய குடிவரவு, குடியகல்வு நலன்புரி சங்கமானது, அங்கத்தவர்களினதும் அவர்களது குடும்பத்தவர்களினதும் பொதுவாக முழு சமூகத்தினதும் நன்மை கருதி, சமய, சமூக மற்றும் கலாச்சார ரீதியான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. இதன் மூலம் உடல், உள ரீதியியல் ஆரோக்கியமான ஒரு ஊழியர் படையினை உருவாக்கி, அவர்களது வினைத்திறனானதும் திருப்திகரமாதுமான சேவையின் ஊடாக பொதுமக்களுக்கு மிகவும் தரமான சேவையினை வழங்குவது நோக்கமாகும்.

| தொடர் இலக்கம் | திகதி | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|---|
| 1. | 1/1/2014 | அங்கத்தவர்களின் பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கைக்கமைய அப்பியாசப் புத்தகங்களை வழங்குதல். |
| 2. | 3/1/2014 | அரசாங்க சேவையாளர் கள விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றல் |
| 3. | 21/3/2014 | பொதுக் கூட்டம் |
| 4. | 7/4/2014 | வலைப்பந்து போட்டியை நடத்துதல் |
| 5. | 7/5/2014 | கரம் போட்டியை நடத்துதல் |
| 6. | 7/5/2014 | நச்சுத் தன்மையற்ற உணவுப் பொருள் நுகர்வை ஊக்கப்படுத்துவதற்காக சேதனப் பசளை இட்டு உற்பத்திசெய்யப்பட்ட உணவுப் பொருள் சந்தையொன்றை நடத்துதல். |
| 7. | 12/5/2014 | வெசக் போயாவை முன்னிட்டு கலந்துகொண்ட மதப் போதனை |
| 8. | 23/5/2014 | Welcom Comminication opening |

| | | |
|---|---|---|
| 9. | 5/6/2014 | ஒரு அங்கத்தவருக்கு ரூ2000 என்ற அடிப்படையில் பிரிவுகளில் உல்லாசப் பிரயாணம் மேற்கொள்வதற்காக ரூ.1,210,000 பணத்தொகையை வழங்குதல். |
| 10. | 14/6/2014 | பிரிவுகளுக்கடையிலான கிரிக்கெட் போட்டி- புகையிரத விளையாட்டு மைதானத்தில் |
| 11. | 20/6/2014 | திணைக்களத்தில் பாடும் ஆற்றலைக் கொண்டவர்களுக்கு களமமைத்தல். சர ஹசர–கொழும்பு மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடம் |
| 12. | 9/7/2014 | இரத்த தான நிகழ்வு – 98 பொயின்ட் இரத்தத்தை வங்கிக்கு வழங்குதல். |
| 13. | 10/7/2014 | அசல பௌத்த மத போதனை (பன) – பண்டாரவளை அமிதானந்த தேரர் கலந்து கொண்ட மதப் போதனை |
| 14. | 11/7/2014 | திணைக்களத்தினுள் இசை ரசனைக்காக ”ரசதீபனீ”நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தல். ரபுக்கன சித்தார்த்த தேரர், திரு.மஹிந்த திசாநாயக்க, திரு.மஹிந்த சந்ரசேகர மற்றும் திரு.பிறேம் ரஞ்சித் விஜேவிக்ரம ஆகியோரின் பங்கேற்புடன் திணைக்களத்தில் இடம்பெற்றது. |
| 15. | 18/11/2014 | நலன்புரி சங்கத்துக்கு உதவியாக நாரதமணி ”ஆனந்தனீய” இசை நிகழ்வு மியூசியஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ரோஹன சிறிவர்த்தன, நிரோஷா விராஜினி, டீ.எம். ஜயவர்த்தன, லக்ஷ்மன் விஜேசேகர,நிர்மலா ரணதுங்க, சமிதா முதுன் கொட்டுவ மற்றும் ரோஹன வீரசிங்க ஆகிய பாடகர்கள் கலந்து மகிழ்வித்தனர். |
| 16. | 30/12/2014 | ஆண்டிறுதியில் இடம்பெற்ற மகிழ்ச்சி ஒன்று கூடல் |

### 2014 இல் நடத்தப்பட்ட நச்சுத் தன்மையற்ற உணவுப் பொருள் நுகர்வை ஊக்கப்படுத்துவதற்கான சேதனப் பசளை இட்டு உற்பத்திசெய்யப்பட்ட உணவுப் பொருள் சந்தை



